அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 270.

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07.
1984 ஒக்டோபர் மாதம் 4 ஆந் தேதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விழா முற்பணம் - 1985

1984 ஆகஸ்ட் 21 ஆந் தேதிய 265 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைப் பார்க்க.

02. 1985 ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 500/- ரூபா விழா முற்பணம் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ) சகல நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் விழா முற்பணம் பெற உரித்துடையராவர்.

(ஆ) கடன் மீள அறவிடப்படும் முழுக்காலத்திற்கும் (ஆகக்குறைந்த பட்சம் 1985 டிசம்பர் வரையும்) தொடர்ந்து சேவையில் இருக்கும் வாய்ப்பு நிச்சயமாகவுள்ளதுடன், முற்பணம் பெறும் தேதிக்கு உடன் முன்னதாக ஒரு மாதக் காலப் பகுதிக்குக் குறையாத தொடர்ச்சியான சேவையில் உள்ள தற்காலிக, அமய தரத்தில் உள்ள சகல உத்தியோகத்தர்களும் இம்முற்பணம் பெறுவதற்கு உரித்துடையராவர்.

03. 1979 டிசம்பர் 06 ஆந் தேதிய 339 ஆம் இலக்க தாபனச் சுற்று நிருபத்தின் ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

04. இச்சுற்று நிருபம் பொது திறைசேரியின் இணக்கத்துடன் விடப்படுகின்றது.

ஒப்பம். எம். எல். ஜூ. ஹனட்.
தாபனப் பணிப்பாளர்.